**O.S. No.10/2024**

**09.03.2026**

**வா.சா.1**

**திருமதி ஜெயந்தி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எத்தனை சொத்துக்கு பாகம் கேட்டுள்ளேன் என்றால் எண்கண், அரசவனங்காடு, தீபங்குடி ஆகிய கிராமங்களில் சொத்துக்கள் உள்ளன. தாவா சொத்துக்கள் குடும்ப சொத்துக்களாகும். தாவா சொத்துக்கள் என் அப்பாவிற்கு சொந்தமானது. தாவா சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவால் கிரயம் பெறப்பட்டது. என்னுடைய அப்பா தம்பிகளுக்கு 10 / 15 வருடங்களுக்கு முன்பாகவே சொத்துக்களை எழுதி வைத்துவிட்டார். என் தகப்பனார் என் சகோதரர்களுக்கு எழுதிவைத்த சொத்தை தவிர மீதம் உள்ள சொத்துக்களில்தான் பாகம் கேட்டுள்ளேன். சொத்தில் 1/5 ல் பாகம் உண்டு என என் அப்பா தெரிவித்தார். அதற்கான சர்வே நம்பர் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 யை படித்து பார்த்தேன். வா.சா.ஆ.2 ல் என்ன கண்டுள்ளது என்று எனக்கு புரியவில்லை. என் சகோதரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் அம்மாவிற்கு சொந்தமான சொத்தை எனக்கு கொடுத்துவிட்டதால் என் அப்பா சொத்தில் எனக்கு பாகமில்லை என

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:43:44 +0530

கண்டுள்ளது. வா.சா.ஆ.2 எனது அப்பாவினுடைய குடும்பத்திற்கு தொடர்புடையது கிடையாது. என் தாத்தா பெயர் சாமிநாதன். ராஜாராமன், சிவசங்கரன், கலியபெருமாள் என 3 மகன்கள் என் தாத்தாவின் பிள்ளைகள். சேகரன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் 2ம் தாரத்து மகன்கள் ஆவார்கள். அரசவனங்காடு கிராம சொத்தானது என் சித்தப்பா சேகரன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது என்றால் தவறு. எண்கண் கிராம சொத்தானது என் மற்றொரு சித்தப்பா ராஜேந்திரனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தவறு. அரசவனங்காடு மற்றும் எண்கண் கிராம சொத்துக்களுக்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. குடவாசல் சொத்தினை வாய்மொழியாக 1ம் பிரதிவாதி செந்தில்குமாரிடம் ஒப்படைக்க வழிவகைகள் செய்து தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வருகிறார் என்றால் தவறு. வா.சா.ஆ.3 ஆனது எந்த சொத்திற்குரியது என்றால் அரசவனங்காடு சொத்து. மேற்படி சொத்துக்கள் என் அப்பாவால் அனுபவித்து வரப்பெற்றது என்பதை நிரூபிப்பதற்கான வருவாய் துறை ஆவணங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எந்த காலத்திலும் சொத்தை கூட்டாக அனுபவிக்கவில்லை எனவும் அதனால்தான் சொத்துக்கள் பற்றி என்னால் தெளிவாக சொல்ல இயலவில்லை என்றால் தவறு. என் தம்பிகளை நீதிமன்றத்திற்கு அலைய வைக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் முன்னறிவிப்பு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:43:52 +0530

அனுப்பாமலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் எனவும் சொன்னால் தவறு. தாவா சொத்துக்களானது 1989 பாக ஆவணத்தின் அடிப்படையில் சித்தப்பாக்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால் அதனையும் இந்த வழக்கில் சேர்த்து பாகம் கேட்டுள்ளது கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. சித்தப்பாக்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது அவர்களுடைய தனித்த அனுபவத்தில் இருந்துவருவதால் தவறான சட்டப் பிரிவின் கீழ் முத்திரை கட்டணம் செலுத்தி கேட்டுள்ள பாக வீதமானது கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. தேவையான தரப்பினர்களை சேர்க்காமலும் பாகம் கிடைக்காத சொத்துக்களின் சர்வே நம்பரை குறிப்பிட்டும் தாக்கல் செய்துள்ள வழக்கில் எந்தவித பாகமும் கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. அதனால் பாகம் ஏதும் வழக்குரையில் கோரியுள்ள படி பிரதிவாதிகள் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.09 15:43:57 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.